1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்கனவே தரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,62,000 பாதாள சாக்கடைத் திட்டத்திற்காகத் தரப்பட்டுள்ளது. ஆனல், சில மாவட்டங்களில் குறைவு என்ருல், அதை நிறைவேற்றும் பொழுது மேலும் கடன் தேவையானல், அவர்கள் கேட்பார்கள். முறைப்படி வழங்கப்படும்.

*100. விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கென பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) திருச்சி நகரத்திற்கான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் 25—5—1970-ல் அளிக்கப்பட்டு, வேலைகள் படிப்படியாக நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திருச்சி நகரத்தின் பாதாள சாக்கடை திட்டத்திற்கு எவ்வளவு செலவு செய்வதாக திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மொத்த செலவு ரூ. 2,85,06,000 என்று போடப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு குறிப்பிடப்பட்டுள்ள செலவு ரூ. 7,57,000 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அரசாங்கம் இதற்கு ஏதாவது மானியம் வழங்கியிருக்கிறதா அல்லது இனிமேல வழங்குவது குறித்து ஆலோசனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தனியாக ஒரு நகரசபைக்கு மானியம் வழங்குவது என்பது இயலாத காரியம். கடன் வழங்குவதற்கான திட்டம். முழு அளவிற்கு கடன் தொகை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதே ஒரு பெரிய முயற்சி.